# ஒதுக்கீட்டுத் தலைப்பு 256 - மாவட்ட செயலகம் கம்பஹா

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2011 ஆம் ஆண்டு

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) வறுமையை ஒழிப்பதற்கான ஆரம்ப முயற்சிகள்

(ஆ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்.

(ஈ) அனர்த்த நிவாரணச் செயற்திட்டங்களையும் புனர்நிர்மாணச் செயற்திட்டங்களையும் நிர்வகித்தல்

(உ) மாவட்டச் செயற்திட்ட நிர்வாகமும் வழிகாட்டலும்

(ஊ) வருமானங்களைச் சேகரித்தல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | அத்தனகல்ல | (ஏ) | களணி |
| (ஆ) | பியகம | (ஐ) | மஹர |
| (இ) | தொம்பே | (ஒ) | மினுவாங்கொடை |
| (ஈ) | திவுலபிட்டிய | (ஓ) | மீரிகம |
| (உ) | கம்பஹா | (ஔ) | நீர்கொழும்பு |
| (ஊ | ஜா-எல | (ஃ) | வத்தளை |
| (எ) | கந்தானை | | |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக்கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

கம்பஹா மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 613,973,600 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 605,756,290 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 8,217,310 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 1.34 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் பின்வருமறு.

| செலவின் தன்மை | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | தேறிய நிதி ஏற்பாடு | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 547,025,000 | 564,673,600 | 7,104,862 | 1.26 |
| மூலதனம் | 49,300,000 | 49,300,000 | 1,112,448 | 2.26 |
| மொத்தம் | 596,325,000 | 613,973,600 | 8,217,310 | |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக 21 அமைச்சுக்களிடமிருந்து ரூபா 2,824,825,117 தொகையும் 13 திணைக்களங்களிடமிருந்து ரூபா 2,715,360,877 தொகையுமாக ரூபா 5,540,185,994 கூட்டுமொத்த தொகையான நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதில் முறையே ரூபா 2,691,905,665 மற்றும் ரூபா 2,486,812,833 தொகையாக ரூபா 5,178,718,498 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 361,467,496 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 54,950,000 | 54,643,563 | 57,500,000 | 59,252,451 | 234,000,000 | 214,821,305 |

## 2.3 பொதுவைப்புக் கணக்கு

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் பொது வைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 495,967,625 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| கணக்கு இலக்கம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0000/00/0032/0000/000 | 495,967,625 |

## 2.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.5 இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

(i) வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பு புத்தகங்கள், வாகனக் கோவைகள், உத்தியோகபூர்வ பயணத்திற்காக வாகனத்தை ஒதுக்கீடு செய்யும் ஏடு என்பன சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 675,818 கூட்டுமொத்தமான கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ii) மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2012 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையும் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அக்கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,957,311 ஆக இருந்தது.

### (ஆ) கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக்குறைந்தது 03 ஆண்டுகளுக்காக் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

மேலே பந்தி (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னைய செயல் நடவடிக்கைத் திட்டம் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

---

மேலே பந்தி (ஆ) இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2012 செப்தெம்பர் 21 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

(உ) **வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

---

2 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற ரூபா 48,316,883 கூட்டுமொத்தமான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்று**

25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 6,658,170 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்ட குறித்த சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 02 | $4^{1}/_{2}$ மாதங்களிலிருந்து 7 மாதங்கள் வரை |

## 2.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் | |
| நி.பி 1646 | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பு அறிக்கையும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களினால் குறித்த சில மாதங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| (i) 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.1 ஆம் பந்தி | மாவட்ட செயலாளருக்கு 02 உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2006 யூலை 14 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 2 இன் பிரகாரம் வைத்திருக்க வேண்டிய அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துள்ள உத்தியோகத்தர்கள் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட எரிபொருள் எல்லையின் கீழ் கடமைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியதுடன் மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் போது அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினை தனிப்பட்ட ரீதியில் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மாவட்ட செயலாளர் |

| | |
|---|---|
| | 2011 ஆம் ஆண்டின் போது எரிபொருள் கட்டளையின் மூலம் 04 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த 320 லீட்டர் எரிபொருளுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 2005 மார்ச் 23 ஆந் திகதிய எச்ஏ/பீஎன்/4/2/2003 ஆம் இலக்க மற்றும் 2006 செப்தெம்பர் 20 ஆந் திகதிய எச்ஏ/பீஎன்/5/11 ஆம் இலக்க சுற்றுநிருபம் | கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் மற்றும் வெளிக்கள கடமைகளில் ஈடுபடும் போது உத்தியோகபூர்வ ஆடைகளை அணிந்து உத்தியோகபூர்வ சின்னங்களைப் பொருத்திக்கொள்ள வேண்டிய போதிலும் தொம்பே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலக சுற்றாடல் அறிக்கையின் பிரகாரம் கடமைச் சந்தர்ப்பங்களின் போது சில கிராம உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ ஆடைகளை அணிந்திருக்காததுடன் அதற்காக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (இ) மாவட்ட செயலாளரின் சுற்றுநிருபம் | |
| 2007 யூன் 27 ஆந் திகதிய 1/8/18 ஆம் இலக்க கடிதம் | அனைத்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களும் ஆண்டின் போது ஆகக் குறைந்தது 4 தடவைகள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் தொம்பே பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள 133 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் 112 அலுவலகங்கள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்**

2010 ஆம் ஆண்டில் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை என்ற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தொம்பே பிரதேச செயலாளர் அலுவலகம் பின்வரும் செயற்திட்ட பிரேரணைகளை அங்கீகரித்துக்கொண்டு 2011 ஆம் ஆண்டில் செயற்திட்டம் தொடர்வதாகக் காட்டி நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் அவற்றினை அமுல்படுத்தாது அந்த நிதி ஏற்பாடுகள் ஏனைய செயற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தியிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) பஹல மாபிடிகம கிம்புல்வில வத்த குளத்தினை புனர் நிர்மாணம் செய்தல் | 1,000,000 | ரன் அருண செயற்திட்டத்தின் கீழ் இது அமுல்படுத்தப்படுதல். |
| (ii) மோரஹேன கிம்புல்வில வத்த குளத்தினை புனர்நிர்மாணம் செய்தல் | 1,000,000 | - மேற்படி - |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

2011 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மாவட்ட செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட 2315 செயற்திட்டங்களில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை 296 ஆக இருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா |
| முன்பள்ளி அபிவிருத்தி | 16,525,573 | 264 | 01 | 2011-12-31 | 15,131,487 |
| பாடசாலை சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் | 204,151,913 | 1,062 | 93 | 2011-12-31 | 171,810,964 |
| கிராமிய வீதி அபிவிருத்தி | 461,536,074 | 561 | 31 | 2011-12-31 | 351,967,337 |
| கமநெகும (விசேட) செயற்திட்டம் | 19,182,622 | 33 | 9 | 2011-12-31 | 16,443,922 |
| சிறிய நீர்ப்பாசனம் | 185,137,683 | 386 | 156 | 2011-12-31 | 98,855,566 |
| ரன் அருண | 1,300,000,000 | 09 | 06 | 2011-12-31 | 135,401,000 |
| | | 2.315 | 296 | | |

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட புவியியல் தகவல் முறைமை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கம்பஹா மாவட்டத்திற்காக புவியியல் தகவல் முறைமையினைத் தயாரிக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கம்பஹா மாவட்டத்தின் தகவல்களை வரைபடமாக்குதல் தொடர்பாக பங்குபற்றிய களணிப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்காக ரூபா 2,647,500 தொகை காசோலையாகச் செலுத்தாது பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு 2010 நவம்பர், திசெம்பர் ஆகிய 2 மாதங்களுக்கு படிகள் செலுத்துவதற்கு 2010 ஒக்டேபார் 14 ஆந் திகதி வழங்கப்பட்டிருநு்த ரூபா 2,500,000 தொகையான நிதி ஏற்பாட்டில் 2010 நவம்பர் மாதத்திலிருந்து 2011 ஏப்ரல் வரையான 4 மாதங்களுக்காக 19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,187,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இச்செயற்திட்டம் 2010 யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததனால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய

திகதியானது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட பிரேரணையின் படி செயற்திட்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

2009 செப்தெம்பர் 10 ஆந் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் குழு கூட்டத்தின் போது அரசாங்க கணக்குகள் குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்தும் போது மெதுவான தன்மைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | அவதானிப்பு/ தீர்மானம்/ அறிவுறுத்தல் | நடவடிக்கை/ தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | | |
| 2006 | 9.2<br>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல் | அனைத்து கணக்காய்வு ஐய வினாக்கள் சம்பந்தமாகவும் முகாமைத்துவ நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் குழு முறைப்படியாக செயற்படாதிருந்ததுடன் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ஆண்டிற்கு ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. மேலும் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களை சரிசெய்து கொள்ளவதில் மெதுவான நிலைமை அவதானிக்கப்பட்டது. |
| 2006 | 10.8<br>முகாமைத்துவ பலவீனம்<br>களணி பிரதேச செலயலாளர் அதிகாரப் பிரிவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுக் கட்டிடங்களில் 16 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பல ஆண்டுகளாக அலுவலகப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | அலுவலகப் படிகளை மீள அறவிடமுடியாது விட்டால் உரிய கிராம சேவை உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு | செலுத்தப்பட்ட அலுவலகப் படிகள் கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2.10 மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 51 | 49 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 26 | 19 | 07 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,675 | 1,432 | 243 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 128 | 110 | 18 |
| | மொத்தம் | 1,880 | 1,610 | 270 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 270 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

2011 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் 13 பிரதேச செயலகங்களில் 05 செயலகங்களை உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக்கால அட்டவணையின் பிரகாரம் மாதாந்தம் முன் நிகழ்ச்சிதிட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் காலாண்டிற்கு ஆகக் குறைந்தது ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்த வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆணடிற்காக ஒரு தடவை மாத்திரம் குழு கூடியிருந்தது.